www.Padasalai.Net www.Trbtnpsc.Com

A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி வரலாறு மதிப்பெண்கள்:90

பகுதி - I

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 20x1=20

1. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K. காந்தி
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

3. கல்கத்தாவில் அனுசீலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிஹாரி தாஸ்
ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்
ஈ) குதிரம் போஸ் மற்றும் பிரஃபுல்லா சாக்கு

4. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?
அ) பாரதி திலகரின் Tenets of the New party என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தார்.
ஆ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்
இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவர்.
ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

5. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?
அ) பி.பி. வாடியா ஆ) ஜவஹர்லால் நேரு
இ) லாலா லஜபதிராய் ஈ) சி.ஆர். தாஸ்

6. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
அ) நாமசூத்ரா இயக்கம் – வடமேற்கு இந்தியா
ஆ) ஆதிதர்ம இயக்கம் – தென்னிந்தியா
இ) சத்யசோதக் இயக்கம் – கிழக்கிந்தியா
ஈ) திராவிட இயக்கம் – மேற்கு இந்தியா

7. கீழ்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?
அ) புலின் தாஸ் ஆ) சச்சின் சன்யால் இ) ஜதீந்திரநாத் தாஸ் ஈ) பிரித்தி வதேதார்

8. முதலாவது பயணிகள் இரயில் 1853–இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் – அரக்கோணம்
ஆ) பம்பாய் – பூனா
இ) பம்பாய் – தானே
ஈ) கொல்கத்தா – ஹுக்ளி

9. பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.
i) அலிகார் இயக்கத்தைத் தோற்றுவித்த சர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசை ஆதரித்தார்.
ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்துமத வகுப்புவாத அரசியலுக்கு அடிதளமிட்டது.
அ) கூற்று i) மற்றும் ii) சரி ஆ) கூற்று i) சரி ii) தவறு
இ) கூற்று i) தவறு ii) சரி ஈ) கூற்று i) மற்றும் ii) தவறு

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



10. இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார் ?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) இராஜாஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

11. கூற்று : வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.
காரணம் : அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறைகளை பின்பற்றியது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

12. பின்வருவனவற்றை கால வரிசைப்படி அமைக்கவும்.
1) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு
2) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்
3) மௌண்ட்பேட்டன் திட்டம்
4) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.
அ) 2), 1), 3) ஆ) 1), 2), 3) இ) 3), 2), 1 ஈ) 2), 3), 1

13. மொழிவாழி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ________
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

14. இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது ?
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

15. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனி நபருக்கு வழங்குகிறது ?
அ) 200 ஆ) 150 இ) 100 ஈ) 75

16. கீழ்க்கண்டவற்றில் எது சுதந்திரமான வர்த்தக நகரம் இல்லை ?
அ) நூரெம்பெர்க் ஆ) ஆன்ட்வெர்ப்
இ) ஜெனோவா ஈ) செயின்ட் பீட்டர்ஸ்பர்க்

17. கூற்று : ஆங்கிலோயர் நாவாய்ச் சட்டங்களை இயற்றினர்.
காரணம் : காலனி நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஆங்கிலேய கப்பல்களின் மூலமாக மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்பதை இச்சட்டம் கட்டாயப்படுத்தியது.
அ) கூற்று காரணம் சரி: காரணம் கூற்றை விளக்குகிறது
ஆ) கூற்று காரணம் சரி: ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

18. பிராங்கோ – பிரஷ்யா போர் உருவாக காரணமாக விளங்கியது ________ ஆகும்.
அ) காஸ்டெய்ன் மாநாடு ஆ) எம்ஸ் தந்தி
இ) பிரேக் உடன்படிக்கைகள்
ஈ) அல்சேஸ், லொரைன் பகுதிகளை கட்டுப்படுத்துவதில் எழுந்த சர்ச்சை

19. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது ?
அ) அவந்தி ஆ) ப்ராவ்தா இ) மார்க்சிஸ்ட் ஈ) மெய்ன் காம்ப்

20. சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது ?
அ) 1931 ஆ) 1932 இ) 1933 ஈ) 1934

## பகுதி – II

**குறிப்பு : அ) எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**ஆ) வினா எண் 30 –க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 7x2=14

21. தேசியம் என்றால் என்ன ?

22. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



23. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
24. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது ?
25. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது ?
26. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது ?
27. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
28. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார் ?
29. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.
30. கஃபிலா என்பதன் பொருள் யாது ?

## பகுதி – III

**குறிப்பு : அ) எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**ஆ) வினா எண் 40 –க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 7x3=21

31. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.
32. வ.உ.சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
34. இந்திய பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது ?
35. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு வரைக.
36. 1909 – ஆம் ஆண்டு மின்டோ – மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
37. மறுமலர்ச்சி காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இலக்கிய சாதனைகளை குறிப்பிடவும்.
38. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
39. இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
40. டாக்டர் லட்சுமி எவ்வாறு தன்னை இந்திய தேசிய இராணுவத்தில் இணைத்துக் கொண்டார் ?

## பகுதி IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7x5=35

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய – உணர்வு தோன்ற காரணமான சமூகப் – பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

42. அ) திலகர் மற்றும் அன்னிபெசன்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

(அல்லது)

ஆ) ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது.

43. அ) 1919 – 1939 –ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு ?

44. அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



45. அ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.

(அல்லது)

ஆ) முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

46. அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் (1900–1920) முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்து காலக்கோடிட்டு காட்டுக.

47. அ) அணி சேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.

(அல்லது)

ஆ) உலக வரைபடத்தில் முதல் உலகப் போரில் பங்கேற்ற நாடுகளை குறிக்கவும்.

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் இ) ஜெர்மனி

ஈ) ரஷ்யா உ) இத்தாலி

***/***

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

1. ஆ. 1835
2. இ. தாதாபாய் நௌரோஜி
3. இ. ஜதீந்திரநாத் பானர்ஜி மற்றும் பரீந்திர குமார் கோஷ்
4. இ. பாரதியார் குருவை (ஆசிரியர்) சகோதரி நிவேதிதை
5. இ. லாலா லஜபதிராய்
6. 3, 1, 4, 2 (திலகர், உ.வே. இ, ஜோ. ஈ, [illegible])
7. இ. ஜதீந்திரநாத் தாஸ்
8. இ. பட்டாபி சீதாராமையா
9. அ. கூற்று (i) மற்றும் (ii) சரி
10. அ. ஜவஹர்லால் நேரு
11. அ. கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
12. அ. 2, 1, 3
13. இ. சந்திரா
14. ஆ. சேலம்
15. இ. 100
16. ஈ. வல்லபாய் பட்டேல்
17. அ. கூ. கா. சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
18. ஆ. [illegible]
19. அ. [illegible]
20. அ. 1931

இரண்டு நாடுகளிலும் குடிபெயர்ந்த குடும்பங்கள் விட்டுச் சென்ற சொத்துகள் ஆக்கிரமிக்கப்பட்டன. எல்லையைக் கடப்பதற்காக நின்ற அகதிகளின் நீண்ட வரிசை கஃபிலா (Kafila) எனப்பட்டது. நடந்து சென்ற அகதிகள் மாற்று வகுப்பைச் சார்ந்த வன்முறைக் கும்பலின் பழிவாங்கலுக்கு இலக்காயினர். பஞ்சாப்பின் புதிய எல்லையின் இருபுறத்திலும் ஓடிய இரயில்களில் பயணம் செய்தோர் கொலைகார கும்பலின் வெறிக்குப் பலியாயினர். வன்முறையில் உயிரிழந்தோர்களின் எண்ணிக்கை 2 இலட்சம் முதல் 5 இலட்சம் வரையிலாக இருக்க வேண்டும் என்றும் 15 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

போஸும் இந்...

போஸ் இராணுவம் சாராத சாதாரண மக்களையும் இந்திய தேசிய ராணுவத்தில் இணைத்ததோடு பெண்களுக்கான ஒரு படைப்பிரிவையும் ஏற்படுத்தினார். மருத்துவராகப் பணியாற்றியவரும் சென்னையைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரரான அம்மு சுவாமிநாதனின் மகளுமான டாக்டர் லட்சுமி, ராணி ஜான்சி என்ற படைப்பிரிவிற்குத் தலைமையேற்றார். சுபாஷ் சந்திர போஸ் 1944 ஜூலை 6இல் தனது ஆசாத் ஹிந்த் ரேடியோவின் மூலம் ரங்கூனிலிருந்து காந்தியடிகளை நோக்கிய ஒரு உரையை ஆற்றினார். காந்தியடிகளைத் "தேசத்தின் தந்தையே" என்று அழைத்த அவர் இந்தியாவின் கடைசி விடுதலைப் போருக்கு அவர்தம் ஆசியைக் கோரினார்.

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com